2nd November 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இல்லை. சென்னை நகரில் பஸ் நிற்குமிடங்களில் நிழல் அமைப்புகளை சென்னை மாநகராட்சி நிறுவி வருகிறது.

திரு. வை. சங்கரன்: அதிகமான பிரயாணிகள் பஸ்களுக்காகக் காத்திருக்கும் முக்கியமான இடங்களிலும், அதிகமான பிரயாணிகள் ஏறி இறங்கக்கூடிய இடங்களிலும் 'ஷெல்டர்' களை அமைக்கும்படியாகக் கார்ப்பரேஷனைச் சர்க்கார் தூண்டுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்னை நகரத்தைப் பொறுத்த கேள்வி இது. சென்னை நகரத்தில் 521 பஸ் ஸ்டாப்கள் இருக்கின்றன. 255 பஸ் ஸ்டாப்களில் ஷெல்டர்கள் இருக்கின்றன. சமீபத்தில் நான் அறிக்கை ஒன்று கொடுத்து, ஷெல்டர்கள் கட்டுவதற்குப் பொது மக்கள் தாராளமாகப் பணம் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதற்காக இருபத்தெட்டாயிரம் ரூபாய் சொச்சம் வந்திருக்கிறது. ஆகவே, இன்னும் 28 ஷெல்டர்கள் போடப்படும். மேலும், மேலும் இந்த விதமான நன்கொடைகள் வந்துகொண்டிருக்கின்றன.

Export of bus coaches

* 315 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have entered into any agreement to supply bus coaches built at Madras State Transport Department Workshop to certain countries abroad; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Does not arise.

கால்நடைப் பண்ணைகள்

* 316 கேள்வி.—திரு. ம. கமலநாதன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஓசூர் கால்நடைப் பண்ணையை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

கனம் திரு. பூ. கக்கன்: ஹோசூர் மாட்டுப் பண்ணையில் உள்ள கோழி வளர்ப்புப் பிரிவை விரிவாக்கும் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அங்கு ஆண்டு ஒன்றுக்கு 25,000 கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். பற்பல துறைகளிலிருந்து கோழிக்குஞ்சுகள் வேண்டுமென்று கேட்பதால், இந்த அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்ணையில் தற்பொழுது வேறு எந்த விதமான விரிவுத்திட்டங்களையும் நிறைவேற்றும் எண்ணமில்லை.

[2nd November 1966

திரு. ம. கமலநாதன் : இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறது? அது எப்போது துவக்கப் படும்?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் புதிதாகக் கால்நடைப் பண்ணை அமைக்கப்படக் கூடிய நிலையில், ஏற்கனவே நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஹோசூர் கால் நடைப் பண்ணையையே மேலும் விஸ்தரிப்பதற்கு ஏன் அனுமதிக்கக் கூடாது?

கனம் திரு. பூ. கக்கன் : ஹோசூர் கால்நடைப் பண்ணையானது இந்தியா தேசத்திலேயே மிகப் பெரிய அளவில் நல்ல முறையில் நடைபெற்று வருகிற பண்ணையாகும். அங்கு ஒரு பண்ணை இருந் தாலும், நாட்டில் இன்னும் பல பண்ணைகளை அமைக்கவேண்டும் என்ற வகையில், சென்னை நகரத்தையடுத்த ஸ்ரீபெரும்புதூருக்குப் பக்கத்தில் ஓர் இடத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஹோசூர் பண்ணையை மேலும் விரிவாக்கவேண்டுமென்றால், அதிக மாகச் செலவாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* 317 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state the work done by the sheep farm in Sandynallah in Nilgiris district till date towards the improvement of indigenous sheep and also production of high variety of wool?

கனம் திரு. பூ. கக்கன் : சபைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி அபிவிருத்தி செய்த ஆட்டினம் தனியார்களுக்கும் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தின்கீழ் தனியார்கள் வைத்திருக்கும் ஆட்டின அபிவிருத்திக்கும் விஸ்தரிக்கப்படுகிறதா என்றால், அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். தனியார்கள் வைத் திருக்கும் ஆட்டினங்களை அபிவிருத்தி செய்வதற்கும், கடா கொடுப் பதற்கும் ஏற்பாடு இருக்கிறது.

* 318 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : } கனம் உள்துறை
திரு. வை. சங்கரன் : }
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) உதகமண்டலத்திலுள்ள ஆடு வளர்ப்புப் பண்ணையில் சமீபத்தில் அதிக அளவில் ஆடுகள் இறந்து போயின என்பது உண்மையா?

(இ) ஆமெனில் எத்தனை ஆடுகள் இறந்தன?

(உ) அதன்மூலம் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

(எ) இது குறித்து எடுத்துக் கொள்ளப்பட்ட தடுப்பு முறை களின் விவரமென்ன?

---

* 97–101-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.